1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் (சபை) மற்றும் அதன் துணைக் கம்பனியில் அடங்கிய தொகுதியின் (''தொகுதி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, அகழ்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் மற்றும் அதன் துணைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, சபையின் மற்றும் தொகுதியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும்

எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி

உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபையிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்

1.5 நிதிக்கூற்றுக்கள்

1.5.1 தேசிய கால்நடை அபிவிருத்தி சபை

1.5.1.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

	உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 55 மற்றும் 78 ஆம் பந்திகளின் படி, பெறுமதி சேர் வரி மற்றும் செலுத்த வேண்டிய சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி ஆகியவற்றை நிதிக்கூற்றுக்களில் ஒரு உப பகுதியாக அல்லது குறிப்புகளில் தனியாக வெளிப்படுத்தியிருக்கப்படல் வேண்டும். எனினும், மொத்தத் தொகையான ரூபா 122,560,183 ஆக உள்ள பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் செலுத்த வேண்டிய சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) என்பன நிதிக்கூற்றுக்களின் ‘‘வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை’’ மீதியின் கீழ் ஒரே உப பிரிவாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.	நடைமுறைப் பொறுப்புகள் மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்புகளின் மொத்தத் தொகையில், பெறுமதி சேர் வரி மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி ஆகியவற்றின் பெறுமதி சதவீத அடிப்படையில் சுமார் 7 சதவீதம் மாத்திரமே ஆகும். இது ஒரு பொருள் சார் தொகையாக இல்லாததால், வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை என்பதன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும், 2025 ஆம் ஆண்டு முதல் இதனை நிதி நிலைமைக் கூற்றின் குறிப்பில் தனியாகக் காண்பிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	நியமங்களின்படி பெறுமதி சேர் வரி மற்றும் செலுத்த வேண்டிய சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி ஆகியவற்றை நிதிக்கூற்றுக்களில் ஒரு உப பிரிவாக அல்லது குறிப்புகளில் தனியாக வெளிப்படுத்தியிருக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 103, 104 மற்றும் 105 ஆம் பந்திகளின் படி, உற்பத்தி செயற்பாடுகளுடன் தொடர்புடைய செலவுகள் விற்பனைச் செலவின் கீழ் இனங்காணப்பட வேண்டும். எனினும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமல், சபையினால் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் மற்றும் தோட்ட உபகரணங்களின் மொத்த தேய்மானப் பெறுமதியான ரூபா 128,326,535 ஆனது நிலைய மற்றும் நிர்வாகச் செலவுகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.	தேசிய கால்நடை அபிவிருத்தி சபையானது பெருமளவில் இயந்திரங்களைப் பயன்படுத்துவதில்லை என்பதோடு, பயன்படுத்தப்படும் பெரும்பாலான இயந்திரங்களின் பயனுள்ள ஆயுட்காலமும் முடிவடைந்துள்ளது. அத்துடன், பொருள் சார் பெறுமதி மாத்திரமே நிலைய மற்றும் நிர்வாகச் செலவினங்களில் பதியப்பட்டுள்ளது.	நியமங்களின்படி உற்பத்தி செயற்பாடுகளுடன் தொடர்புடைய செலவுகள் விற்பனைச் செலவின் கீழ் இனங்காட்டப்பட வேண்டும்.
(இ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 15 மற்றும் 16 ஆம் பந்திகளின் படி, சபையானது தற்காலிகமாகக் வரி விதிக்கப்படக்கூடிய வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு, மீளாய்வாண்டிற்காக பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் அல்லது பொறுப்புகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கியிருத்தல் வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் இருந்து, தற்காலிகமாகக் வரி விதிக்கப்படக்கூடிய சொத்துகளைக் கருத்தில் கொண்டு, பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் அல்லது பொறுப்புகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கங்களை	இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி பிற்போடப்பட்ட சொத்துகள் மற்றும் பொறுப்புகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

		மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	
(ஈ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 50 மற்றும் 51 ஆம் பந்திகளின் படி, பயன்பாட்டிலுள்ள சொத்துகளின் ஆயுட்காலம் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்டு, பயனுள்ள ஆயுட்காலம் மதிப்பிடப்பட்டு கணக்குகளில் மதிப்பீட்டு மாற்றமாகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். எனினும், மொத்தத் தொகையான ரூபா 423,612,567 ஆக உள்ள முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட நிலையான சொத்துகளைச் சபையானது தொடர்ந்தும் பயன்படுத்தி வந்தபோதிலும், அவற்றின் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை.	இலங்கை கணககீட்டு நியமம் 16 இன் படி பயன்பாட்டிலுள்ள சொத்துகளின் ஆயுட்காலம் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்டு, பயனுள்ள ஆயுட்காலம் மதிப்பிடப்பட வேண்டும் என்றபோதிலும், நிலையான சொத்துகளை மீள்மதிப்பீடு செய்வதற்கு பெருமளவு செலவு ஏற்படும் என்பதாலும், நிலவும் நிதிச் சிரமங்கள் காரணமாகவும் இவ்வருடத்தில் மீள்மதிப்பீடு எதுவும் மெற்கொள்ளப்படவில்லை	நியமங்களின்படி சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட சொத்துகளின் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கம்செய்யப்பட வேண்டும்.
(உ)	2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபையிடம் காணப்பட்ட ரூபா 1,335,382 பெறுமதியான முந்திரிகைச் செய்கை, ரூபா 212,765 பெறுமதியான கறுவாப்பட்டை செய்கை மற்றும் ரூபா 20,409,766 பெறுமதியான இறப்பர் செய்கை போன்ற முதிர்ச்சியடைந்த தாங்கு உயிரியல் சொத்துக்களுக்கு இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் படி மீளாய்வாண்டிற்கான உரிய பெறுமானத் தேய்வுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு அறிக்கையுடன் உடன்படுகின்றோம். எதிர்காலத்தில் இறப்பர் செய்கைக்கான உரிய பெறுமானத் தேய்வுச் செலவினை இனங்கண்டு புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	நியமங்களின்படி உரிய பெறுமானத் தேய்வுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஊ)	இலங்கை நிதி அறிக்கையிடுதல் நியமம் 09 இன் 5.5.15 ஆம் பந்தியின் படி, வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளுக்கான பிற்பட்ட குறைபாடுகளை இனங்கண்டு அளவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு முறைமை (Expected Credit Loss Method) பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும், ரூபா 234,835,927 ஆக உள்ள வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளுக்கு அவ்வாறு கணக்கிடப்படாமல், நிதிக்கூற்றுக்களில் ரூபா 103,324,907 ஒதுக்கீடு	கணக்காய்வு அறிக்கையுடன் உடன்படுவதுடன், 2025 நிதியாண்டு முதல் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு முறைமையைப் பயன்படுத்தி உரிய கணக்கீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	நிதி அறிக்கையிடுதல் நியமத்தின்படி வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளுக்கான பிற்பட்ட குறைபாடுகளை இனங்கண்டு அளவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு முறைமை (Expected Credit Loss Method) பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

	செய்யப்பட்டதன் காரணமாக, 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான குறித்த வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டொர் மீதிகளின் சரியான பெறுமதி உறுதிப்படுத்தப்படவில்லை.		
(எ)	இலங்கை நிதி அறிக்கையிடுதல் நியமம் 16 இன் 81 ஆம் பந்திக்கு முரணாக, பரசன்கஸ்வெவ மற்றும் ஒயாமடுவ ஆகிய 02 பண்ணைகளை 2022 ஏப்ரல் 05 முதல் 2023 ஏப்ரல் 05 ஆம் திகதி வரை குத்தகைக்கு விட்டதன் மூலம் 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 22,755,600 மொத்த வருமானம் 2022 ஆம் ஆண்டின் வருமானமாக கணக்கிடப்பட்டமையினால், மீளாய்வாண்டின் 94 நாட்களுக்குரிய ரூபா 5,860,346 வருமானம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.	கணக்காய்வு அறிக்கையுடன் உடன்படுகிறோம். எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாதிருப்பதை உறுதிசெய்வதற்காக, திரட்டிய அடிப்படையில் குத்தகை வருமானங்களை வருமானக் கூற்றில் சேர்ப்பது தொடர்பாக தொடரபுடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	நியமங்களின்படி குறித்த ஆண்டிற்குரிய குத்தகை வருமானம் சரியாகக் கணக்கிடப்பட்டு கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.

1.5.1.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் பண்ணைகளில் ஒரே தேவைக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களில் முறையே ரூபா 143,210,749 மற்றும் ரூபா 48,964,645 பெறுமதியானவை முறையே 05 சதவீதம் மற்றும் 10 சதவீதம் என்ற விகிதங்களின் கீழ் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதன் காரணமாக, குறித்த சொத்துகள் மற்றும் அதற்குரிய பெறுமானத்தேய்வு பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் சரியாகமாக முன்வைக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	சபையின் ஆதனங்கள் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களானவை அவ்வப்போதைய நோக்கத்திற்கு அமைய தோட்ட உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களாக இரு தொகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளமையினா லேயே இவ் வேறுபாடு ஏற்பட்டுள்ளது.	ஒரே தேவைக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களுக்கு உரியவாறு சரியான பெறுமானத்தேய்வு விகிதங்களை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்டு கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	பேரேட்டின் படி 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பணிக்கொடை ஒதுக்கீட்டின் இறுதி மீதி ரூபா 228,769,504 ஆக இருந்தபோதிலும், 2023 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியானது ரூபா 228,614,106 ஆகக் காட்டப்பட்டமையினால், மீளாய்வாண்டின் பணிக்கொடை ஒதுக்கீட்டு மீதி ரூபா 155,398 இனால் குறைவாக இனங்காட்டப்பட்டுள்ளது.	கணக்காய்வு வினவலுடன் உடன்படுகின்றோம். இலங்கை கோழிப்பண்ணை அபிவிருத்தி தனியார் கம்பனியின் நிதிக்கூற்றுக்களை ஒருங்கிணைக்கும் போது, அந்நிறுவனத்தினால் 2023 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 155,398 தொகையின் காரணமாக ஆரம்ப மீதியானது குறித்த தொகையினால்	ஆரம்ப மீதிகள் சரியாகக் கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.

		குறைவடைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் போது உரிய தவறானது சீராக்கப்பட்டுள்ளது.	
(இ)	சபையின் தலைமை அலுவலகக் கணக்கிற்கு அமைய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் சேமிப்பு வைப்புக் கணக்கின் மீதி ரூபா 180,000 ஆக இருந்தபோதிலும், வங்கி மீதி உறுதிப்படுத்தலின் படி அவ் மீதியானது ரூபா 480,000 ஆக காணப்பட்டமையினால், காசும் காசுக்குச் சமமானவையும் ரூபா 300,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.	கணக்காய்வு அறிக்கையுடன் உடன்படுகின்றோம். மூலதன முதலீட்டுக் கணக்கிற்குரிய ஆரம்ப மீதியை QB கணக்கீட்டு மென்பொருளில் உள்ளிடும் போது ஏற்பட்ட தவறினால், பாற்பண்ணைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது உரிய தவறானது சீராக்கப்பட்டுள்ளது.	கணக்கு மீதிகளைக் கணக்கீட்டு மென்பொருளில் துல்லியமாக உள்ளிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	வெலிசறை பால் திட்டத்திற்கு அமைவாக வர்த்தக மற்றும் ஏனைய பொது இருப்புக்களின் கீழ் காணப்படுகின்ற 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிலிருந்து நிலுவையாக உள்ள மொத்தம் ரூபா 26,492,243 பெறுமதியான இருப்புகள் பௌதிக ரீதியாகக் இனங்காணப்படவில்லை.	கணக்காய்வு அறிக்கையுடன் உடன்படுகிறோம். வெலிசறைப் பண்ணையின் கிடைக்கப்பெறாத இருப்பு மீதியானது கணக்கீட்டு முறைமைக்கும் பௌதிக ரீதியாகக் கணக்கிடப்பட்ட இருப்பு மீதிக்கும் இடையே ஏற்பட்ட வேறுபாடாகும், எனவே அது பௌதிக ரீதியாக இல்லை. மேலும், பழைய வெலிசறைப் பண்ணையில் காணப்பட்ட இருப்பானது புத்தகங்களிலிருந்து நீக்கப்படவில்லையென்பதுடன், பௌதிக இருப்புச் சரிபார்ப்பும் மேற்கொள்ளப்படவில்லை.	கணக்கீட்டு முறைமைக்கும் பௌதிக ரீதியாகக் கணக்கிடப்பட்ட இருப்பு மீதிக்கும் இடையே ஏற்பட்ட வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.
(உ)	2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபையின் நிதிக் கூற்றுக்களின் படி செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரித் தொகை ரூபா 109,873,954 ஆக இருந்தபோதிலும், அட்டவணைகள் மற்றும் வரி அறிக்கைகளின் படி அத்தகைய மீதி ரூபா 79,828,695 ஆக காணப்பட்டமையினால் ரூபா 30,045,259 வேறுபாடு இனங்காணப்பட்டது.	பெறுமதி சேர் வரி மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி தொகையான ரூபா 122,560,183 செலுத்த வேண்டிய வரியாக நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டதை ஏற்றுக்கொள்வதுடன், சீராக்கப்பட வேண்டிய தொகைகள் வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளமையினாலேயே இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இதற்கான திருத்தங்கள் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி தொகைகள் சரியாகக் கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(ஊ)	2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் மீதியில் காட்டப்பட்டுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து பெறவேண்டிய ரூபா 3,672,177 மீதிக்குள் மொத்தமாக ரூபா 344,031 தொகையைக் கொண்ட இரண்டு செலவு மீதிகள் காட்டப்பட்டுள்ளமையினால், பெறவேண்டிய பெறுமதி அப்பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.	இம்மீதியானது பல வருடங்களுக்கு முன்னரிருந்து நிலுவையாக உள்ள ஒரு மீதியாவதுடன், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலுள்ள மீதிகளுடன் இணக்கஞ்செய்து எதிர்காலத்தில் திருத்தப்படும்.	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மீதிகளுடன் இணக்கஞ்செய்து திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(எ)	கந்தகாடு காணி குத்தகை மூலம் மீளாய்வாண்டிற்குரிய குத்தகை வருமானம் ரூபா 9,167,917 ஆக இருந்தபோதிலும், நிதிக்கூற்றுக்களில் அவ்வருமானம் ரூபா 11,580,000 எனக் காட்டப்பட்டமையினால் முதலீட்டு வருமானம் ரூபா 2,412,083 இனால் அதிகமாகக் காட்டப்பட்டுள்ளது.	கணக்கீட்டு அறிக்கையுடன் உடன்படுகின்றோம். நிகழ்நிலை பணப்பரிமாற்ற முறைமை மூலம் குறித்த குத்தகைப்பணம் தலைமை அலுவலகத்தின் வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், அப்பணத்தை அனுப்பும்போது அது எந்தக் காலப்பகுதிக்குரியது என்பது தொடர்பில் குறிப்பிடப்படாதிருந்தமையினாலேயே இது நிகழ்ந்துள்ளது. குத்தகை ஒப்பந்தங்களுக்குரிய காலப்பகுதியைக் கருத்திற் கொண்டு 2024 ஆம் ஆண்டின் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் போது உரிய தவறைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	காணி குத்தகை வருமானங்கள் சரியாகக் கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.
(ஏ)	வெலிகந்தை பண்ணையின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் 211 விலங்குகளின் உயிரியல் சொத்துகளின் பெறுமதி ரூபா 14,907,600 எனக் காட்டப்பட்டிருந்தபோதிலும், இருப்பு சரிபார்ப்பு அறிக்கையின் படி பௌதிக ரீதியான விலங்குகளின் எண்ணிக்கை 108 ஆகக் காணப்பட்டது. இதன்காரணமாக, பௌதிக ரீதியாக இல்லாத 103 விலங்குகளின் பெறுமதியான ரூபா 7,065,050 நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்பட்டமையினால், உயிரியல் சொத்துகளின் மீதி அப்பெறுமதியால் கூடுதலாக மதிப்பிடப்பட்டுள்ளது.	இருப்புச் சரிபார்ப்பு அலுவலர்கள் பௌதிக ரீதியான பரிசோதனையை சில நாட்களுக்குள் மேற்கொண்டமையினால், இவ்விலங்குகளை முழுமையாக பௌதிக ரீதியாகக் கணக்கிட முடியாமல்போனது. இப்பண்ணையிலுள்ள விலங்குகள் முழுமையாகப் பண்ணையின் உள்ளே இருப்பதில்லை என்பதால், இருப்புக் கணக்கெடுப்பில் குறைபாடு காணப்படலாம். முறையான விசாரணையின்றி விலங்குகளின் குறைபாட்டைப் புத்தகங்களிலிருந்து கழித்து	உயிரியல் சொத்துகள் சரியாகக் கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.

		எழுத முடியாது. இப்பிரச்சினையின் அடிப்படையில் இவ்விலங்குகளை வேறொரு பண்ணைக்கு இடமாற்றம் செய்வது ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், இவ்விலங்குகளில் ஏதேனும் குறைபாடு காணப்படின், அதற்குரிய சீராக்கங்கள் புத்தகங்களில் மேற்கொள்ளப்படும்.	
(ஐ)	அனுராதபுர மாவட்ட செயலகத்தினால் ஒயாமடுவ பண்ணைக்குரிய காணியில் 150 மெட்ரிக் தொன் மேலதிக உணவுப் பயிர்களைக் களஞ்சியப்படுத்தக்கூடிய களஞ்சியசாலையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அது 2022 யூலை 07 ஆம் திகதி ஒயாமடுவ பண்ணை முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. குறித்த கட்டிடம் பொறுப்பேற்கப்பட்டு 3 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துள்ளபோதிலும், அக் காலப்பகுதிக்குள் எந்தவொரு பொருளாதார நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், குறித்த கட்டிடத்தின் பெறுமதியை நிலையான சொத்துப் பதிவேட்டில் சேர்ப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு வினவலுடன் உடன்படுகிறோம். 2023/2024 காலப்பகுதியில் சபையின் மறுசீரமைப்புடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தமையினால், இப்பண்ணையின் செயற்பாடுகளுக்காக இது பயன்படுத்தப்படவில்லை. எதிர்காலத்தில் இப்பண்ணைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதால், சந்தர்ப்பத்தில் இக்கட்டடங்களும் பண்ணையின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.	குறித்த கட்டடத்தின் பெறுமதியை நிலையான சொத்துப் பதிவேட்டில் சேர்த்து கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5.1.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து வரும் ரூபா 16,566,783 ஒத்திவைக்கப்பட்ட செலவின மீதி தொடர்பிலான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாததனால் அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் போயுள்ளது.	இத்தொகையான ரூபா 16,566,783 ஆனது 2013 ஆம் ஆண்டிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட செலவினமாக கணக்கு வைக்கப்பட்டுள்ள போதிலும், 2013 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை எவ்வித ஒத்திவைக்கப்பட்ட வருமானமும் ஈட்டப்படவில்லை. எனவே, இச்செலவினத்தை புலனாய்வு செய்து கணக்குப் புத்தகங்களிலிருந்து தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	தகவல்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.2 வ/ப இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனி

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 யூன் 18 ஆம் திகதிய அமப/20/0890/217/052 ஆம் இலக்க அமைச்சரவைக் கூட்டத்தில், இக்கம்பனியை தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் ஒரு பண்ணையாக நடாத்திச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அதனடிப்படையில் கலைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 25 ஆம் பந்திக்கு அமைவாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதியிலான நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன், நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் என வெவ்வேறாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.	உரிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றின் 3.1.2.1 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாகக் கலைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படுத்தல்கள் நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை கணக்கீட்டுத் நியமம் 10 இன் 17 ஆம் பந்திக்கு அமைவாக, நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட திகதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற போதிலும், பணிப்பாளர் சபையினால் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்ட திகதி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	வரையறுக்கப்பட்ட இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனியானது, தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான 100 சதவீத பங்கு உரிமையைக் கொண்டது கம்பனியாகும் என்பதுடன் தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் நிதிகூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர் சபை வழங்கிய அங்கீகாரமானது நிதிக்கூற்றின் 2.2 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	கணக்கீட்டுத் நியமத்திற்க்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்ட திகதி வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(இ)	இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 இன் 5.5.15 ஆம் பந்திக்கு அமைவாக நட்டஈட்டுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும், 5 முதல் 10 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கு மேலாகவும் நிலுவையிலுள்ள மொத்தம் ரூபா 6,610,335 பெறுமதியான பெறவேண்டிய மீதிகளுக்கு நட்டஈட்டுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	உரிய நட்டஈட்டுச் சீராக்கங்களை 2025 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	கணக்கீட்டுத் நியமத்திக்கு அமைவாக நட்டஈட்டுச் சீராக்கம் சரியாகக் கணக்கில் பதிவிடப்பட வேண்டும்.

(ஈ)	கொழும்பு பான்ஸ் இடத்தில் அமைந்துள்ள கம்பனிக்குச் சொந்தமான ரூபா 22,500,000 செலவீனத்தைக் கொண்ட கட்டிடமானது 2014 யூலை 01 முதல் 2023 திசெம்பர் 31 வரை பெறுமானத்தேய்வு கணக்கிடப்படாததன் காரணமாக, கணக்காய்வுக்குட்பட்ட ஆண்டின் நட்டம் ரூபா 1,125,000 இனால் குறைவாகவும், எஞ்சிய வருமானம் ரூபா 10,687,500 இனால் குறைவாகவும், ஆதனங்கள் பொறி மற்றும் உபகரணங்களின் புத்தகப் பெறுமதி அதே தொகையினால் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.	கணக்காய்வு வினவலுடன் உடன்படுவதுடன், கட்டடத்திற்குரிய பெறுமானத் தேய்வினை மேற்கொண்டு 2024 ஆம் ஆண்டுக் கணக்குகளில் சரியாகக் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	சொத்துக்களுக்கான வருடாந்த பெறுமானத் தேய்வு சரியாகக் கணக்கில் பதிவிடப்பட வேண்டும்.
(உ)	நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் குறைவு முறையே ரூபா 929,810 மற்றும் ரூபா 534,409 ஆக இருந்தபோதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது அம்மீதிகள் முறையே ரூபா 671,310 மற்றும் ரூபா 515,912 எனக் காண்பிக்கப்பட்டிருந்தன.	காசுப் பாய்ச்சல் கூற்றின் தவறுகள் திருத்தப்பட்டுள்ளன.	காசுப் பாய்ச்சல் கூற்று சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	தலைமை அலுவலகத்தின் ஊழியர் கடன்பட்டோர் பெறுமதியான ரூபா 757,743 தொகையில் 5 வருடங்களுக்கும் மேற்பட்ட ரூபா 379,262 கொண்ட கடன்பட்டோர் மீதியொன்று காணப்பட்டது. அத்துடன், ஊழியர் கடன்பட்டோர் பெறுமதியில் ரூபா 636,326 ஆனது நிறுவனத்தை விட்டு விலகிச் சென்றுள்ள 12 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியாக இருந்தது.	கணக்காய்வு அறிக்கையுடன் உடன்படுகின்றோம்.	ஊழியர் கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	நிதிக் கூற்றுக்களின்படி, ரூபா 234,257,786 ஆக காணப்பட்ட கடன்பட்டோர் மீதியில் 5 வருடங்களுக்கும் மேற்பட்ட கடன்பட்டோர் பெறுமதி ரூபா 79,650,700 ஆக இருந்ததுடன், அம்மீதியானது மீளாய்வாண்டின் இறுதி	கணக்காய்வு அறிக்கையுடன் உடன்படுகின்றோம். அறவிட முடியாத மட்டத்திலுள்ள 5 வருடங்களுக்கும் மேற்பட்ட கடன்பட்டோர் மீதிகளைக் கணக்குப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பு செய்வதற்குத்	கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

	வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்நாளில் சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 5,821,542 ஆன கடன்பட்டோர் பெறுமதியில் எவ்வித கடன்பட்டோர் மீதியும் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் அறவிடப்படாது காணப்பட்டது.	தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	
(இ)	”எழுவோம் பொலன்னறுவை” திட்டத்தின் கீழ் பொலன்னறுவை பண்ணையின் புனரமைப்புப் பணிகளுக்காக 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவீனமான ரூபா 5,044,043 தொகையானது பெறவேண்டிய மீதிகளாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி நாள் வரையிலும் அம்மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எழுவோம் பொலன்னறுவை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான பட்டியல்கள் மீள்நிரப்பலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய ஒதுக்கீட்டுக் காலம் முடிவடைந்தமையினால் மீண்டும் பொதுத் திறைசேரிக்குத் திருப்பி அனுப்பப்பட்டதன் காரணமாக இத்தொகையைச் செலுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது.	எழுவோம் பொலன்னறுவை திட்டத்திற்காகப் பெறவேண்டிய பணத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	போபத்தலாவ பண்ணையின் குளங்களைச் சுத்தப்படுத்துவதற்காக சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் தனியார் கம்பனியொன்றிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 150,000 தொகையானது மீளாய்வாண்டின் சபையின் நிதிக்கூற்றுக்களில் முன்செலுத்தல்களாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இச்செலுத்தல் தொடர்பில் பணி நிறைவேற்றப்பட்டதற்கோ அல்லது பணம் செலுத்தப்பட்டதற்கோ மூல ஆவணங்கள் இன்மையால் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அப்பணத்தொகை அறவிடப்படாமல் காணப்பட்டது.	போபத்தலாவ பண்ணையினால் உரிய கம்பனிக்கு பணம் செலுத்தப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு எவ்வித மூல ஆவணத்தையும் கண்டறிய முடியாமல் உள்ளமையினால், உரிய பணத்தை அறவிட முடியாமல் உள்ளது.	மூல ஆவணத்தைக் கண்டறிவதற்கும், உரிய தரப்பினரிடமிருந்து அதனை அறவிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	சபையின் நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்புக்களிலுள்ள வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டிய மீதிகளின் கீழ் காணப்பட்ட வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதிகளின் காலப் பகுப்பாய்வின்படி, 01 முதல் 05 வருடங்கள் வரையான	சபையில் காணப்பட்ட நிதிச் சிரமங்கள் காரணமாகக் கடன்களைத் தீர்ப்பது தாமதமடைந்துள்ளதுடன், தற்போது இக்கடன்கள் தவணை முறையில் தீர்க்கப்பட்டு வருகின்றன.	செலுத்தவேண்டிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

	காலப்பகுதிக்கான நிலுவையிலுள்ள மொத்தம் ரூபா 132,942,034 மற்றும் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதிக்கான நிலுவையிலுள்ள மொத்தம் ரூபா 57,227,417 கொண்ட கடன் மீதிகள் காணப்பட்டன.		
(ஆ)	வரையறுக்கப்பட்ட இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனியானது தனது நிதிக்கூற்றுக்களில் தேசிய கால்நடை அபிவிருத்தி சபையிடமிருந்து பெறவேண்டிய மீதிகளாக மொத்தம் ரூபா 3,345,629 தொகையைக் காண்பித்திருந்த போதிலும், சபையின் நிதிக்கூற்றுக்களின்படி கம்பனிக்குச் செலுத்தவேண்டிய தொகையாக எவ்விதப் பெறுமதியும் இனங்காட்டப்பட்டிருக்கவில்லை.	2015 ஆம் ஆண்டில் தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கும் அதன் பண்ணைகளுக்கும் ரூபா 4,089,480 பெறுமதியான எருமைகளும் பசுக்களும், ரூபா 982,440 பெறுமதியான தளபாடங்களும் வழங்கப்பட்டதுடன், அதன் மொத்தப் பெறுமதி ரூபா 5,071,920 ஆகும். அத்தொகையிலிருந்து கழித்துக்கொள்வதற்காக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,245,785 பெறுமதியான எருமைகள் சபையினால் கம்பனிக்கு வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இரு நிறுவனங்களுக்கும் இடையிலான சாதாரண கொடுக்கல் வாங்கல்கள் இப்பெறவேண்டிய தொகையிலிருந்து கழிக்கப்பட்டுள்ளதால், எஞ்சிய பெறவேண்டியத் தொகையாக ரூபா 3,345,629 கம்பனியின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய மீதியைக் கலைப்பு நடவடிக்கைகள் முடிவடையும் போது தீர்த்துக்கொள்ள முடியும் என்பதை அறியத்தருகின்றேன்.	சபையின் நிதிக்கூற்றுக்களில் கம்பனியிடமிருந்து பெறவேண்டிய மீதிகளுக்கும், கம்பனியின் நிதிக்கூற்றில் சபைக்குச் செலுத்தவேண்டிய பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடுகளை இணக்கஞ்செய்து, நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும்.
(இ)	1993 ஆம் ஆண்டிலிருந்து சபையினால் பின்பற்றப்பட்டு வரும் கணக்கீட்டு வழிகாட்டல்களுக்கு அமைவாக, பண்ணையில் பணத்தினைக் கையாள்வதற்காக அது தொடர்பான அதிகாரிகளுக்குப் பணத் தொகையில் 0.75 சதவீதம் தரகுப் பணம் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வழிகாட்டல்களுக்காகப் பெறப்பட்ட	கணக்கீட்டு வழிகாட்டல்கள் 1993 ஆம் ஆண்டிலிருந்து சபையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதுடன், இது 32 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளமையினால் இதற்கான அங்கீகாரம் பெறப்பட்டதா இல்லையா என்பதைக் கண்டறிய முடியாமல் போயுள்ளது.	பணத்தினைக் கையாள்வதற்காக அது தொடர்பான அதிகாரிகளுக்குத் தரகுப் பணம் செலுத்தப்படுவதாயின், அதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

	அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2023 திசெம்பர் 31 ஆம் திகதியிலான சபையின் நிதிக்கூற்றுக்களில் வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை (Trade and Other Payable) என்பதன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 48,891,243 கொண்ட ஊழியர்க் கடன்கொடுத்தோர் (Staff Creditors) மீதியில், பண்ணை ஊழியர்களுக்குச் செலுத்தவேண்டிய தரகுப் பணம் (Cash Commission) ரூபா 12,051,665 உள்ளடங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.		
(ஈ)	2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளின் பெரும்போக சோள அறுவடைகளைக் கொள்வனவு செய்வதற்காக விவசாயிகளின் பொறுப்பு நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 102,662,700 கொண்ட கடனுக்காக 2012 ஆம் ஆண்டு வரை திரட்டிய கடன் வட்டி ரூபா 98,023,448 ஆனது நடைமுறைப் பொறுப்புக்களின் ஒதுக்கீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் அவ்வட்டியைச் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	விவசாயிகளின் பொறுப்பு நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடனுக்கான வட்டியைச் செலுத்துவது தொடர்பில் இதுவரை எவ்வித உடன்பாடும் எட்டப்படாததனால், அத்தொகையானது செலுத்தவேண்டிய கடன் வட்டி கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், சபையில் காணப்படும் நிதிச் சிரமங்கள் காரணமாகப் பெறப்பட்ட கடன் தொகை மாத்திரம் மாதாந்தம் ரூபா 500,000 தவணைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டு வருகின்றது.	திரட்டிய கடன் வட்டி தொடர்பில் உடன்பாடொன்றை ஏற்படுத்திக்கொண்டு அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(உ)	2012 ஆம் ஆண்டில் வ/ப லிபிய விவசாய மற்றும் கால்நடை தனியார் கம்பனியின் முழுமையான பங்கு உரிமையைப் பெற்று, சபையின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனமான வரையறுக்கப்பட்ட இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனி நிறுவப்பட்டிருந்ததுடன், வ/ப லிபிய விவசாய மற்றும் கால்நடை தனியார் கம்பனியின் பங்குதாரர்களுக்கும் பணிப்பாளர் சபைக்கும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கான செலவு, விமானக் கட்டணம் மற்றும் ஒருங்கிணைந்த படிகளுக்காக ரூபா 4,201,333 செலுத்தவேண்டியிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் அச்செலுத்தவேண்டிய மீதியைத்	இத்தொகையானது வ/ப லிபிய விவசாய மற்றும் கால்நடை தனியார் கம்பனியின் சார்பில், தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் லிபிய வெளிநாட்டு முதலீட்டுக் கம்பனிக்கு வங்கி வரைவோலையின் மூலம் செலுத்தப்பட்ட ஒரு தொகையாகும். உரிய லிபிய வெளிநாட்டு முதலீட்டுக் கம்பனி அவ்வங்கி வரைவோலையைத் தீர்வு பணமாக்காததனால, இலங்கை வங்கியானது உரிய வங்கி வரைவோலையின் பெறுமதியை தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் கணக்கில் செலவு வைத்துள்ளது.	இம்மீதியைச் செலுத்துவதற்கான சாத்தியக்கூறு, தேவைப்பாடு போன்றவை குறித்து குழுவொன்றின் மூலம் பரிசீலித்து, அதனைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது வருமானமாகப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

	தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(ஊ)	2023 திசெம்பர் 31 ஆம் திகதியிலான சபையின் நிதிக்கூற்றுக்களின்படி, வரையறுக்கப்பட்ட கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனியிடமிருந்து பெறவேண்டிய மீதியாக ரூபா 4,218,655 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அக்கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் செலுத்தவேண்டிய மீதியாக மொத்தம் ரூபா 2,591,558 மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக, நீண்டகாலமாக நிலவும் ரூபா 1,627,097 கொண்ட இவ்வேறுபாட்டைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	வரையறுக்கப்பட்ட கோழி வளர்ப்பு தனியார் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வியாபாரக் கம்பனி ஆகிய இரு கம்பனிகளின் பரிவர்த்தனைகளில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக இவ்வேறுபாடு தோன்றியுள்ளதுடன், அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக இக்கம்பனிகளை தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் கீழ் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இதன்போது இக்கணக்குகளில் காணப்படும் தவறுகள் திருத்தப்படும்.	அட்டவணைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு இடையில் காணப்படும் வேறுபாடுகளை இனங்கண்டு, மீதிகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய சட்டத்தின் பிரிவு 02 மற்றும் 1975 பெப்ரவரி 14 திகதிய 157 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி	சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்குத் தொடர்பில்லாத செயற்பாடுகளுக்காக, மஹபேரியதன்னையில் அமைந்துள்ள 517 ஏக்கர் 14 பேர்ச்சஸ் காணியொன்று ரூபா 29,418,300 சலுகைத் தொகைக்கு 99 வருடங்களுக்கும், வெலிசரையில் அமைந்துள்ள 03 ஏக்கர் 0.31 பேர்ச்சஸ் காணியொன்று ரூபா 31,600,800 சலுகைத் தொகைக்கு 30 வருடங்களுக்கும் இரு தனியார் கம்பனிகளுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.	1992 ஒக்டோபர் 28 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக, வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் தலைவராகப் பிரதம அமைச்சரினால் 1992.10.05 ஆம் திகதியிட்டு ”விக்டோரியா கோல்.ஃ.ப் திட்டத்திற்கு காணிகளை ஒதுக்குதல்” எனும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அமப/1192/145 (5) ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பிற்கு அமைவாக, மஹபேரியதன்னை பண்ணையிலிருந்து 517	சபைக்குச் சொந்தமான காணிகளை குத்தகைக்கு கொடுக்கும் போது சட்டம் மற்றும் வர்த்தமானியின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தங்களின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்களுக்குரிய அலுவல்களுக்காக வழங்கப்பட வேண்டும்.

			ஏக்கர் காணிப்பகுதியானது 1996 ஆம் ஆண்டிலிருந்து 99 வருடங்களுக்கு ராஜவெல்ல ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் பிரிவு 5(1)	சேவையிலிருந்து விலகிய 30 நாட்களுக்குள் பணிக்கொடையைச் செலுத்தி முடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2004-2022 காலப்பகுதியில் சேவையிலிருந்து விலகிய 25 ஊழியர்களுக்காக ரூபா 2,226,774 மற்றும் 2023 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து விலகிய 61 ஊழியர்களுக்காக ரூபா 12,672,254 உட்பட மொத்தம் ரூபா 14,899,028 தொகை மீளாய்வாண்டின் இறுதி நாளில் செலுத்தப்பட வேண்டியிருந்தது.	2023 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைத் தொகை ரூபா 13,878,089 ஆகும் என்பதுடன், 1993 முதல் 2007 வரையிலான காலப்பகுதியில் சேவையை விட்டு விலகிய 15 வருகைப் பதிவேட்டுப் பணியாளர்களின் பெறுமதியான ரூபா 1,020,939 தொகை தனிப்பட்ட கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும், ஊழியர்கள் சேவையிலிருந்து விலகி 30 நாட்களுக்குள் பணிக்கொடையைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், சில ஆவணங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாகச் சில நாட்கள் தாமதம் ஏற்படக்கூடும் என்பதை அறியத்தருகின்றேன்.	சட்டத்தின் பிரகாரம் உரிய தினத்தில் பணிக்கொடை கொடுப்பனவு செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	2021 நவம்பர் 16 ஆம் திகதிய 1/2021 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேடு மற்றும் வழிகாட்டலின் 6.6 ஆம் பிரிவு	கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுகளையும் வரைவு வருடாந்த அறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்ற போதிலும், 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளை சபையானது 607 நாட்கள் தாமதத்துடன் 2025 ஒக்டோபர் 27 ஆம் திகதியன்றும், இலங்கை	நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, தற்போது அத்தாமதம் குறைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. 2026 ஆம் ஆண்டிற்குள் 2024 ஆம் ஆண்டு மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதன் மூலம்	சுற்றறிக்கை விதிமுறைகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட திகதிகளில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

		கோழிப்பண்ணை அபிவிருத்தி தனியார் கம்பனியானது 652 நாட்கள் தாமதத்துடன் 2025 டிசம்பர் 12 ஆம் திகதியன்றும் கணக்காய்விற்காக சமர்ப்பித்திருந்தன.	இத்தாமதம் முழுமையாக முடிவுக்கு கொண்டு வரப்படும்.	
(ஈ)	2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் (2006 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான) 26(1) ஆம் பிரிவு	காலப்பகுதிக்குரிய வரிகள், அதற்கு அடுத்துவரும் மாதத்தின் இருபதாம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்பட வேண்டும் என்றபோதிலும், 2023 ஜனவரி முதல் திசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்குரிய சபையின் ரூபா 63,751,460 தொகையைக் கொண்ட வரிப் பொறுப்பானது 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சபையில் காணப்பட்ட கடுமையான நிதி நெருக்கடி காரணமாக இவ்வரிப் பணத்தைச் செலுத்துவதற்கான சாத்தியக்கூறு இருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன், நிலுவை வரிப் பணத்தை பொதுத் திறைசேரியிடமிருந்து வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றும், 2025 ஆகஸ்ட் மாதம் முதல் உரிய வரிப் பணத்தை நிலுவையின்றி உரிய திகதியில் செலுத்துவதாகவும் அறியத்தருகின்றேன்.	நிலுவை வரிப் பணம் தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், வரிப் பணத்தை நிலுவையின்றி குறிக்கப்பட்ட திகதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(உ)	2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரிச் சட்டத்தின் 01 மற்றும் 17 (i) ஆம் பிரிவுகள்.	2022 ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்குரியதாகச் செலுத்தப்பட வேண்டிய சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரி ரூபா 7,462,429 மற்றும் 2023 நவம்பர் மற்றும் திசம்பர் மாதங்களுக்குரியதாகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 8,614,805 தொகையைக் கொண்ட சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரிகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சபையில் காணப்பட்ட கடுமையான நிதி நெருக்கடி காரணமாக இவ்வரிப் பணத்தைச் செலுத்துவதற்கான சாத்தியக்கூறு இருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதுடன், நிலுவை வரிப் பணத்தை பொதுத் திறைசேரியிடமிருந்து வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றும், 2025 ஆகஸ்ட் மாதம் முதல் உரிய வரிப் பணத்தை நிலுவையின்றி உரிய திகதியில்	நிலுவை வரிப் பணம் தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், வரிப் பணத்தை நிலுவையின்றி குறிக்கப்பட்ட திகதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை மெற்கொள்ளப்பட வேண்டும்.

செலுத்துவதாகவும்
அறியத்தருகின்றேன்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை மற்றும் அதன் நிருவாகத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 126,380,488 இற்கான நட்டமொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 148,554,214 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 274,934,702 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு நிலையான சொத்துக்களின் பெறுமதி மாற்றம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 266,875,590 ஆல் குறைந்தமையும் நிருவாகம் மற்றும் வினியோகம் மற்றும் ஏனைய செலவுகள் அதிகரித்தமையுமே பிரதானமான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை மற்றும் அதன் நிருவாகத்தின் விற்பனை வருமானம் 02 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், இனவிருத்திச் சொத்துக்களின் நியாயமான பெறுமதி அதிகரித்தல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 63 சதவீதமாக குறைந்தமையினால் சபை மற்றும் அதன் நிருவாகத்தினதும் மொத்த இலாபம் 13 சதவீதத்தினால் குறைந்திருந்தது. மேலும், சபையின் வினியோகச் செலவு 56 சதவீதத்தினாலும், நிருவாகச் செலவு 07 சதவீதத்தினாலும் மற்றும் ஏனைய செலவுகள் 54 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

2.3 விகித பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை மற்றும் அதன் நிர்வாகத்தின் நடைமுறைச் சொத்துக்களின் விகிதம், விரைவுச் சொத்துக்களின் விகிதம், மொத்த இலாப விகிதம் என்பன முறையே 1:1.24, 0.72 மற்றும் 25.5 சதவீதமாகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டில் அவ்விகிதங்கள் முறையே 1:1.35, 0.74 மற்றும் 28.23 சதவீதமாகக் காணப்பட்டன. அதற்கமைய, நடைமுறைச் சொத்துக்களின் விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்களின் விகிதத்தில் சிறியளவிலான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்படுவதுடன், நடைமுறை மூலதனச் சிக்கலொன்றை எதிர்கொண்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. மேலும், மொத்த இலாப விகிதம் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13 சதவீதத்தினால் குறைந்திருந்தது. அதற்கான காரணங்களாக, மீளாய்வாண்டில் விற்பனை 02 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்த போதிலும், இனவிருத்திச் சொத்துக்களின் நியாயமான பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 63 சதவீதத்தினால் குறைந்திருந்தமையே பிரதான காரணமாக அமைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ வினைதிறனின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிதி நிலைமைக் கூற்றின்படி, ரூபா 11,746,756 செலவினத்தைக் கொண்ட 890.71 ஹெக்டேர் நிலம் ஓயாமடுவ பண்ணைக்குச் சொந்தமாக இருந்தபோதிலும், அப்பண்ணையில் 209 பசுக்களைப் பராமரிப்பதைத்	இந்த பண்ணையை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான அளவு மூலதனம் தேசிய கால்நடை அபிவிருத்தி சபையிடம் இல்லாத நிலையில், எதிர்காலத்தில் தனியார் துறையுடன் இணைந்து இப்பண்ணையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள்	பண்ணைக்குச் சொந்தமான நிலங்களை சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட

	தவிர, அந்நிலம் வேறு எந்தப் பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. பண்ணைக்குச் சொந்தமான நிலத்தில் 826 ஏக்கர் 2022 ஆம் ஆண்டில் ஒரு தனியார் கம்பனியிற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தபோதிலும், 2023 ஏப்ரல் 05 ஆம் திகதியுடன் அக்குத்தகைக்காலம் முடிவடைந்த பின்னர், அது மீண்டும் குத்தகைக்கு விடப்படவோ அல்லது வேறு எந்தப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படவோ இல்லை.	திட்டமிடப்பட்டுள்ளன. இதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு ஒரு முக்கியமான பங்களிப்பு கிடைக்கும்.	வேண்டும்.
(ஆ)	மிரிஸ்வத்த பண்ணையில் 2022 செப்டம்பர் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் 1,726 இனப்பெருக்கக் கோழிகள் காணாமல் போனதால் ஏற்பட்ட ரூபா 5,351,366 பெறுமதியான வளப் பற்றாக்குறை உட்பட, 2023 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி அறவிடப்பட வேண்டிய ரூபா 5,536,409 தொகைக்கு பொறுப்பான தரப்பினரை அடையாளம் காண்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அத்தொகை அறவிடப்படாமல் காணப்பட்டது.	இது தொடர்பாக சபையினால் விசாரணை நடாத்தப்பட்டதுடன், பொலிஸ் முறைப்பாடு தொடர்பான விசாரணையும் இடம்பெற்று வருகின்றது. தேவையான நடவடிக்கைகள் முடிந்தவுடன் சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து பணத்தை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	முறையான விசாரணையொன்று மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	2020 யூன் 18 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மான இலக்கம் அமப/20/0890/217/052 இன் மூலம் வ/ப இலங்கை கோழிப்பண்ணை அபிவிருத்தி தனியார் கம்பனியை தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்குக் கையகப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட அனுமதிக்கு அமைவாக, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் படி, பங்குதாரர்களின் விருப்பத்தின் பேரில் கம்பனியை கலைப்பதற்காக 2021 யூலை 16 அன்று ஒரு கலைப்பாளர் நியமிக்கப்பட்டு, 2023 ஏப்ரல் 26 அன்று ரூபா 117,400 முன்பணமும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், கம்பனி	இக் கம்பனியை பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பேரில் கலைப்பதற்கான ஆவணங்களை கம்பனிப் பதிவாளர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கும் போது, அக் கம்பனியின் செயலாளர்களால் ஏற்பட்ட தொழில்நுட்பத் தவறு காரணமாக, அது மீண்டும் கடன்கொடுத்தோரின் விருப்பத்தின் பேரில் கலைக்கப்படும் ஒன்றாக மாறியது. அதற்கமைய, முக்கிய கடன்கொடுத்தோரில் ஒருவரான கோல்ட் கொய்ன் (தனியார்) கம்பனி இக்கலைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையால்	அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக வ/ப இலங்கை கோழிப்பண்ணை அபிவிருத்தி தனியார் கம்பனியை சபைக்குக் கையகப்படுத்துவதற்கு இனியும் தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

	கலைக்கப்படாமையினால் அச்செலவு பொருளாதார ரீதியில் பயனற்றதாகியிருந்தது. இரண்டாவதாக, கடன்கொடுத்தோரின் விருப்பத்தின் பேரில் நிறுவனத்தைக் கலைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டு, கம்பனியின் முக்கிய கடன்கொடுத்தோரால் முன்மொழியப்பட்ட கலைப்பாளருக்காகச் செய்யப்பட வேண்டிய செலவு கணிசமாக அதிகரித்ததன் காரணமாக, கம்பனியின் முக்கிய கடன்கொடுத்தோருக்கு 2024 யூன் 30 ஆம் திகதி நிலவரப்படி செலுத்த வேண்டிய ரூபா 13,869,511 தொகையைச் செலுத்தி கலைத்தல் முறையை முன்னெடுத்துச் செல்வதற்கு தேசிய கால்நடை அபிவிருத்தி சபை கடன்கொடுத்த கம்பனியுடன் உடன்பட்டிருந்த போதிலும், 2026 ஜனவரி 05 ஆம் திகதியாகும்போதும் கலைத்தல் நடவடிக்கைகள் முடிவடையவில்லை.	இச்செயற்பாடு தாமதமானது. முக்கிய கடன்கொடுத்தோரான கோல்ட் கொய்ன் ∴பீட் மில்ஸ் லங்கா லிமிடெட் கம்பனிக்கு 2025 செப்டம்பர் 19 ஆம் திகதியிட்ட கடிதம் மூலம் செலுத்தப்பட வேண்டிய ரூபா 13,169,511 தொகைக்கு 10 சதவீத கழிவு கோரப்பட்டுள்ளதுடன், தற்போது அதற்கு அவர்கள் உடன்பாடு தெரிவித்துள்ளனர். அக்கடனைச் செலுத்தி முடித்த பின்னர் கலைத்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும்.	
(ஈ)	சபைக்குச் சொந்தமான வெலிகந்த பண்ணையில் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துப் பரிசோதனை அறிக்கையில், 57 வகையான நிலையான சொத்துப் பொருட்களில் 120 அலகுகள் பற்றாக்குறையாக இருந்தன. 2022 ஆம் ஆண்டின் சொத்துப் பரிசோதனை அறிக்கையின்படியும் இவ்வகை சொத்துப் பொருட்களில் தட்டுப்பாடுகள் நிலவியிருந்தன. எனினும், அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் மீதிகள் முன்னோக்கி கொண்டு செல்லப்பட்டிருந்தன.	இது தொடர்பில் விசாரணை நடத்தி, பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் கண்டு மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்கனவே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	சொத்துப் பற்றாக்குறை குறித்து விசாரணை நடத்தி, பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் கண்டு மேலதிக நடவடிக்கைகளை எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(உ)	சபையின் நிதிக் கூற்றுக்களின்படி, 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 52,521,680 ஆக இருந்த வங்கி மேலதிகப்பற்று மீளாய்வாண்டின் இறுதி நாளில் ரூபா 60,203,743 ஆக உயர்ந்ததன் காரணமாக, வங்கி மேலதிகப்பற்று 14 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.	சபை அரச வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட வங்கி மேலதிகப்பற்று வசதியை அதிகரிக்கவும் இல்லை மற்றும் மேலதிகப்பற்று எல்லையைக் கடந்து செல்லவுமில்லை. எனினும், காசுப் புத்தகத்தின் மீதியினுள் சமர்ப்பிக்கப்படாத	வங்கி மேலதிகப்பற்றை குறைந்த மட்டத்தில் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

		காசோலைகளின் பெறுமதியும் உள்ளடங்கியிருந்தமையினால், மேலதிகப்பற்று எல்லையை விட காசுப் புத்தகத்தின் மீதி அதிகரித்துள்ளது.	
(ஊ)	வெலிகந்த பண்ணையில் ரூபா 619,485 காசுப் பற்றாக்குறை மற்றும் ரூபா 10,287,510 பெறுமதியான இனவிருத்திச் சொத்துகளின் பற்றாக்குறை என மொத்தம் ரூபா 10,906,995 தொகையை அறவிடுவது தொடர்பாக மோசடி விசாரணைப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடு மீதான விசாரணை இடம்பெற்று வருவதுடன், 2026 ஜனவரி 31 ஆம் திகதியாகும்போதும் அதன் நடவடிக்கைகள் நிறைவடையவில்லை.	இது தொடர்பாக மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு விசாரணை செய்யப்பட்டு வருவதுடன், பொறுப்பானவர்கள் இதுவரை துல்லியமாக அடையாளம் காணப்படாததால் மேலதிக நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் போயுள்ளது. மோசடி விசாரணைப் பிரிவின் பணிகள் முடிந்ததும், அதன் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	காசு மற்றும் இனவிருத்திச் சொத்துகளின் பற்றாக்குறை குறித்து விசாரணை நடத்தி, உரிய தொகையை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டு வினைதிறனின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்குச் சொந்தமான பண்ணைகளில் பால் பசுக்கள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கை 2021, 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் முறையே 11,760, 10,503 மற்றும் 9,854 என குறைந்திருந்த போதிலும், விலங்குகளுக்கான தீவனச் செலவு முறையே ரூபா 862,707,615, ரூபா 949,560,850 மற்றும் ரூபா 960,698,128 என அதிகரித்திருந்தது. மேலும், குறித்த காலப்பகுதியில் பெறப்பட்ட பாலின் அளவு முறையே 10,331,358 லீற்றர், 7,062,151 லீற்றர் மற்றும் 5,552,868 லீற்றர் எனப் படிப்படியாகக் குறைந்திருந்தது.	ரிதியகம பண்ணையில் பால் உற்பத்தி வெகுவாக வீழ்ச்சியடைந்தமையும், இவ்வாண்டுகளில் விலங்குத் தீவனங்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்தமையுமே பால் உற்பத்தி குறைவடைந்தமைக்கான முக்கிய காரணங்களாகும். இவ்வாண்டுகளில் அடர் தீவனங்களின் விலைகள் விரைவாக உயர்ந்தமையே விலங்குத் தீவனச் செலவுகள் அதிகரித்தமைக்கு முதன்மைக் காரணமாக அமைந்தது.	நிறுவனத்திடம் உள்ள வளங்களைப் பயனுள்ள முறையில் பயன்படுத்தி, தரமான விலங்குத் தீவனங்களை உற்பத்தி செய்து விலங்குகளுக்கு வழங்குவதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	2023 ஆம் ஆண்டில் சபையின் பண்ணைகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட பசு மற்றும் எருமை, பன்றி, செம்மறியாடு, வெள்ளாடு, பாரம்பரியமற்ற விலங்கு வளர்ப்பு மற்றும் உருளைக்கிழங்கு செய்கை ஆகிய பிரதான திட்டங்கள்	கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பசு மற்றும் எருமை, பன்றி, செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் உருளைக்கிழங்குத் திட்டங்களின் மொத்த வருமானம், விற்பனைச் செலவு	நிறுவனத்தின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்தி, முதலீட்டிற்குச் சார்பாக அதிகபட்சமான பலன்களைப்

	மூலம் மொத்தம் ரூபா 1,919,670,505 வருமானம் ஈட்டப்பட்டிருந்தபோதிலும், அதற்கான விற்பனைச் செலவு மொத்தம் ரூபா 1,932,546,548 ஆக இருந்தமையினால் குறித்த திட்டங்கள் மூலம் ரூபா 12,876,043 நட்டம் ஏற்பட்டிருந்தது.	மற்றும் மொத்த நட்டம் என்பன சரியானவையாகும்.	பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2025 ஒக்டோபர் 27 அன்று கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2025 நவம்பர் 26-30 காலப்பகுதியில் இலங்கையைப் பாதித்த தித்வா சூறாவளியால் ஏற்பட்ட பாதகமான தாக்கம் காரணமாக, சபைக்குச் சொந்தமான 24 பண்ணைகளில் 418 விலங்குகள், 12 பண்ணைகளில் 1,490 தென்னை மரங்கள் உட்பட ஏனைய வகை மரங்கள், வாழை, சோளம் போன்ற குறுகிய காலச் செய்கைகள் மற்றும் கட்டிடங்கள், வீதிகள் உள்ளிட்ட நிலையான சொத்துகளுக்குச் சேதம் ஏற்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தித்வா சூறாவளிச் சேதத்திற்கான உரிய பதிவழிப்புக்கள் 2025 நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.	நிறுவனம் மற்றும் பண்ணை சார்ந்த பேரிடர் முகாமைத் திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன், சேதத்தைக் கண்டறிந்து நிதிக் கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும்.